## கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம்- 2013

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 2008 இன் 02 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவக வழிகாட்டியின் 27 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின்

காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த விவசாய தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெரிவுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்குரிய செலவினம், 2013 ஆம் ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் செலவினம் மற்றும் அட்டுறு செலவினம் என்பன ரூபா 72,167 ஆல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகத்திற்குச் சொந்தமாக காணப்படும் 3848 சதுர அடி அளவிலான 04 கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2004 யூன் 29 ஆம் திகதிய 25 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | திறைசேரியின் முன் அங்கீகாரம் இல்லாமல் ரூபா 33,594,075 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ / 2002 / 02 ஆம் இலக்க திறைசேரி சுற்றிக்கை | கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 6,301,901 மிகையாக

இருந்ததுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,194,894 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 4,107,007 ஆல் அதிகரித்தமைக்காக அரசாங்க மானியம் ரூபா 3,479,000 ஆல் அதிகரித்தமை விசேடமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 வரை பணிப்பொறுப்பு அடிப்படையில் சேர்க்கப்பட்ட 35 ஊழியர்கள் காணப்பட்டதுடன், அவர்களில் 11 பேர் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருந்ததுடன், சேவைக் காலம் வருடா வருடம் நீடிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இழைய நடுகை வாழைப் பழ உற்பத்திக்கு நேரடியாக பங்களிப்புச் செய்யும் இழைய நடுகை ஆய்வுகூடம் மற்றும் பசுமை வீடுகளின் அனைத்து உத்தியோகத்தர்கள், செயற்பாட்டு மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்றை பராமரித்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கும் வழிகாட்டுவதற்கும் முடியுமான வகையில் மீளாய்வாண்டிற்கு முன்னர் கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்து முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

நிதி மற்றும் செயற்பாட்டு செயலாற்றுகைக்காக உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படும் வகையில் மீளாய்வாண்டிற்கு முன்னர்

செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாமல் இருந்ததுடன், 2013 ஆம் ஆண்டின் போது அடைந்து கொள்வதற்கு / நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட விருப்புகள் மற்றும் இலக்குகள் மற்றும் அதன் நிதி மற்றும் பௌதீக செயன் முன்னேற்றத்தை கணக்காய்வின் போது பரீட்சிக்க முடியவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

(ஆ) பாடநெறி வருமானம் மற்றும் செலவின கணக்கீடு

(இ) முற்பணக் கட்டுப்பாடு